


நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி - திருவாரூர்
நீதிக்கதைகள்
இரண்டாம் வகுப்பு

# 1 . கூடி வாழ்ந்தால் கோடி நன்மை



**காட்டில் வேடன் ஒருவன் புறாக்களைப் பிடிப்பதற்காக வலை விரித்தான்.**



**அப்போது , வலையில் ஒரே ஒரு புறா மட்டுமே சிக்கியது.**




வேடன் அப்புறாவை வலையிலிருந்து கையில் எடுத்தான்.



அந்த புறா வேடனைப் பார்த்து “வேடரே! என்னை கொன்று விடாதே!என்னை நீ விட்டுவிட்டால் உனக்கு இலாபம் கிடைக்கும் எனத் தந்திரமாக பேசியது.



“நீ என்னை விடுவித்தால் நான் பறந்து சென்று என்னுடைய நண்பர்களிடம் நயமாக பேசி, இங்கு அழைத்து வந்து உன் வலையில் விழ வைப்பேன்” என்றது. புறா சொன்னதைக் கேட்டு அப்புறாவை அவன் விட்டுவிட்டான்.




புறாக்களை எதிர்பார்த்து வேடன் காத்திருந்தான்.



அப்புறா, அங்கிருந்த புறாக்களிடம் பேசி அவர்களை அங்கிருந்து அழைத்துச் சென்றது.




வேடன், விரித்திருந்த வலையை அப்புறாக்கள் சேர்ந்து தூக்கிச் சென்றன.



நீதி :

"ஒற்றுமையே வலிமை"

## 2. மன்னரின் வினோதமான ஆசை



ஒரு அழகிய ஊரில் ஒரு வினோதமான ராஜா இருந்தார்.



**அந்த , ராஜாவுக்கு பலவித உணவுகள் என்றால் மிகவும் பிடிக்கும். நம் நாட்டு உணவு மட்டும் அல்லாமல், அயல் நாட்டு உணவையும் ருசித்து பார்க்க வேண்டுமென்று ராஜாவுக்கு ஒரே ஆசை....**




**அப்போதுதான், ராஜாவுக்கு ஒரு "யோசனை" தோன்றியது.**



இந்த எண்ணத்தை செயல்படுத்த வேண்டும் என்பதற்காக தனது அமைச்சரவையை உடனே கூட்டினார். கூட்டத்தில் தன்னுடைய ஆசையை கூறினார்.



ராஜா , அப்படி சொன்னதும் அமைச்சர்கள் ஒன்று கூடி விவாதித்தார்கள்.



சில அமைச்சர்கள் அயல்நாட்டிற்குச் சென்று பலவித உணவுகளை வாங்க சென்றார்கள்.

சில நாட்களுக்கு பிறகு…..



அரசே , அயல்நாட்டுக்குச் சென்றிருந்த நம் அமைச்சர்கள் அனைவரும் வந்து விட்டார்கள்.வாருங்கள் சென்று போய் பார்க்கலாம்.



மலைபோல், குவிந்திருக்கும் உணவைப்பார்த்த ராஜா மகிழ்ச்சியில் இந்த அனைத்து உணவையும் ருசித்து விடவேண்டும் என்று எண்ணினார்.



தினமும் , ராஜா பலவித உணவை சாப்பிட்டு வந்தார். திடீரென, ஒருநாள் ராஜாவுக்கு உடலில் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டது . "உடல் பருமனானதைக் கண்ட ராஜா"அதிர்ச்சியடைந்தார். அவர் செய்த தவறை உணர்ந்தார்



**நீதி :**

**“அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு”**

## 3.முயல், நாய், ஓநாய்

**ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி இருந்தான்.அவன் தொடக்கத்தில் விவசாயத்தில் நல்ல பலனைக் கண்டான். ஆனால், சிறிது காலமாக விவசாயத்தில் நட்டம் ஏற்பட்டு பயிர்கள் சேதம் அடைந்தன.**

**அதற்கான காரணத்தை அறிவதற்காக அவன் 24 மணி நேரமும் வயலில் இருந்து காரணத்தை கண்டறிய முடிவு செய்தான்.**



**ஒரு நாள் இரவு . வயலில் ஏதோ நடமாட்டம் தெரிந்தது.**



ஓடிச்சென்று பார்த்தான். முயல், நாய் , ஓநாய் ஆகியவை வயலில் உள்ள பயிர்களை நாசப்படுத்தி தப்பி விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தன.



அவற்றைப் பிடித்துவிட முயற்சித்தான். பல நாள் முயன்று அவைகளைப் பிடித்தான் விவசாயி .



முதலில் முயலிடம், “ ஏன் நீ என் வயலுக்கு வந்தாய்?” என்று கேட்டான். “நான் வந்தது தவறுதான். சில முள்ளங்கி இலைகளைப் பசிக்காகச் சாப்பிட வந்தேன். இனி இங்கே வரவே மாட்டேன் என்னை “மன்னித்து விட்டு விடு” என்று கெஞ்சியது முயல்.




நாயிடமும் அதே கேள்வியை விவசாயி கேட்டான். அதற்கு நாய், “நான் எதையும் திருடுவதற்காக உன் வயலுக்கு வரவில்லை. முயல்களும்,ஓநாயும் வந்து உன் வயலில் உள்ள பயிரை அழித்து விடாமல் காப்பாற்றுவதற்காகவே வந்தேன் ” என்று கூறியது நாய்.

கடைசியாக ஓநாயைப் பார்த்து “நீ ஏன்வந்தாய்?” என்று கேட்டான். அதற்கு ஓநாய், உன் ஆட்டுக்குட்டிகளைத் தின்பதற்காகவே நான் வந்தேன் .



அப்படி தின்பதற்கு எனக்கு உரிமையுண்டு . எங்கள் ஓநாய் சமூகத்திற்குச் சேர வேண்டிய ஆட்டுக்குட்டிகளை எப்படி வைத்திருக்க முடியும்?நான் உனது ஆட்டுக்குட்டிகளை வேட்டையாடுவேன். இந்த பயிர்களையும் நாசப்படுத்துவேன் என்றது.



மூன்றும் பேசியதை கேட்ட விவசாயி , “முயல் உள்ளதை ஒப்புக்கொண்டது . மன்னிப்பும் கேட்டது”. அதனால் அதை விடுதலை செய்தான் விவசாயி. ஆனால்,நாய் மிகப்பெரிய பொய் சொல்லி தப்பிக்கப் பார்க்கிறது. ஓநாய் தான் செய்யும் திருட்டைக்கூட நியாயப்படுத்துகிறது என்று கூறி இரண்டையும் கம்பை எடுத்து அடித்தான் விவசாயி.



**நீதி :**

**“வாய்மையே வெல்லும்”**

## 4.புறாவும் எறும்பும்




**ஒரு காட்டில் எறும்பு ஒன்று உணவு தேடி அலைந்தது. அப்படி செல்லும் வழியில் ஆற்றில் தவறி விழுந்தது.**



அப்போது , மரத்தில் புறா ஒன்று ஆற்றில் விழுந்த எறும்பைப் பார்த்ததும் சிறுதும் யோசிக்காமல் கிளையில் இருந்து இலை ஒன்றை பறித்து ஆற்றில் போட்டது.




அதை கவனமாக பிடித்துக் கொண்ட எறும்பு மெதுவாக கரையை வந்து அடைந்தது.



கரையை அடையும்பொழுது வேடன் ஒருவன் புறாவிற்கு குறிவைத்து அம்பு எய்தினான்.



அப்போது , எறும்பு சிறிதும் யோசிக்காமல் வேடனின் காலை "நறுக்கென்று" கடித்தது . வேடனோ வலியில் "அய்யோ-அம்மா" என்று கதறினான். அம்பு குறிதப்பி மரத்தில் பட்டது. எறும்பு புறாவை ஆபத்தில் இருந்து காப்பாற்றியது.



**“ பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**

**நன்மை கடலின் பெரிது”.**

**நீதி:**

**எதிர்பாராமல் செய்த உதவி கடலினும் பெரிது.**

## 5. நரியும் நாரையும்




**ஒரு காட்டில் ஒரு குள்ளநரி வசித்து வந்தது. அது எப்பொழுதும் மற்ற மிருகங்களைக் கேளி செய்து ஆனந்தமடையும் . அப்போது , அக்காட்டில் அழகிய நாரை ஒன்று வந்தது.**



குள்ளநரி நாரைக்கு எதிராக ஒரு சதி திட்டம் போட்டது. அடுத்தநாள் நாரை தனியாக இருக்கும்பொழுது நரியோ! மிகவும் பணிவுடன் மதிய உணவிற்கு நாரையை அதன் வீட்டிற்கு அழைத்தது.



அடுத்தநாள், நாரை நரியின் வீட்டிற்குச் சென்றது. அப்போது, நரி ருசியான பாயசத்தை பரிமாறியது. ஆனால், தட்டையான பாத்திரத்தில் வைத்தால் அதன் பெரிய அலகினால் குடிக்க முடியவில்லை. அதைப் பார்த்து நரி நாரையைக் கேளி செய்தது.



நரியோ, பாயசத்தை முழுவதுமாக குடித்தது. கோபமடைந்த நாரை நரிக்கு பாடம் புகட்ட நினைத்தது.



நாரை அதன் வீட்டிற்கு நரியை விருந்திற்கு அழைத்தது.



அடுத்தநாள், கொக்கு வீட்டிற்கு நரி சென்றது . சாப்பிட உட்கார்ந்ததும் புத்திசாலியான நாரை நரிக்கு உயரமான பாத்திரத்தில் உணவை வைத்திருந்தது.




நாரை சந்தோஷமாக தன் உணவை சாப்பிட்டது. ஆனால் , நரிக்கு பாத்திரத்தில் தலையோ நுழையவில்லை . நரி பசியுடன் நாரை சாப்பிடுவதை ஏக்கத்துடன் பார்த்தது. நரி தான் செய்த தவறை உணர்ந்தது .




நீதி:

“ஒருவன் மற்றவர்களை ஏமாற்ற நினைத்தால் ஒருநாள் அவனும் ஏமாறுவான்”.


## 6 . நேருக்கு நேர்




ஓர்அழகிய ஊரில் ஒரு ஆடு ஒன்று மேய்ந்து விட்டு ஆற்றின் மேல் உள்ள பாலத்தின் வழியாக நடந்து வந்தது.



அப்போது , அவ்வழியாக மற்றொரு ஆடு ஒன்று வந்தது.
அது ஒற்றையடி பாலம் என்பதால் ஒருவர் மட்டுமே செல்ல முடியும்.




ஆனால், இரண்டு ஆடுகளும் ஒன்றை ஒன்று விட்டு கொடுக்காமல் , ஒருவரை ஒருவர் தனது கொம்புகளால் தாக்கிக் கொண்டன.




**இறுதியில், இரண்டு ஆடுகளில் ஒரு ஆடு பரிதாபமாக கீழே விழுந்து இறந்து விட்டது.**

**நீதி:**



**“விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை”.**

# 7. நாயும் நிழலும்



ஒரு ஊரில் நாய் ஒன்று எலும்புத் துண்டை தூக்கி வந்தது.



அப்போது , செல்லும் வழியில் ஒரு பாலத்தை கடக்க வேண்டியிருந்தது. நாய் பாலத்தைக் கடக்கும் போது கீழே தண்ணீரைப் பார்த்தது. அந்த தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது. தண்ணீரில் தெரிந்த அதன் உருவத்திலும் வாயில் எலும்புத்துண்டு இருந்தது.



அதைக் கண்ட நாய் " இந்த நாயிடமும் எலும்புத்துண்டு உள்ளது. இதையும் அபகரித்துவிட வேண்டும்" என்று நினைத்தது. உடனே அது பலமாக 'லொள்' 'லொள்' எனக் குரைத்துக் கொண்டே தண்ணீரில் தெரிந்த நாயின் மீது பாய்ந்தது.




அதனால் அதன் வாயில் இருந்த எலும்புத்துண்டும் தண்ணீரில் விழுந்தது. தண்ணீரில் விழுந்தவுடன் தான் அந்த முட்டாள் நாய்க்கு புரிந்தது இது நிழல் பிம்பம் என்று.

நீதி:

"பேராசை பெரு நஷ்டம்"

# 8. நரியின் கோரப்பசி



ஒரு நாள் ஒரு திராட்சை தோட்டத்திற்கு அருகில் நரி ஒன்று பசியோடு நடந்து சென்றது.



அப்போது, நரி அதன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த திராட்சைகளைப் பார்த்ததும் நரிக்கு இன்னும் அதிகமாக பசி தூண்ட ஆரம்பித்தது.



நரி திராட்சைகளைப் பறிப்பதற்காக , “எகிறி எகிறி” குதித்து அதைப் பறிக்க முயற்சி செய்தது. எவ்வளவு முயற்சி செய்தும் நரியால் அத்திராட்சைகளைப் பறிக்க முடியவில்லை.



கடைசியில் , சோர்ந்து நரி கீழே விழுந்தது.



ச்சீ..ச்சீ... இந்த திராட்சை கண்டிப்பாக புளிப்பாகத்தான் இருக்கும் . இவ்வளவு புளிப்பான திராட்சை யாருக்கு வேண்டும் என்று சொல்லி நரி கிளம்பியது.

நீதி:



“நமக்கு கிடைக்காத ஒரு பொருளை கேவலமானது என்று சொல்வதே மனிதர்களின் குணம்”.

**மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்:**

திரு. கோ. நாகராஜன் B.A., (நிறுவனர்)

திருமதி நா. பிரகதாம்பாள்., B.A., (தாளாளர்)

Rtn. Dr. நா. முரளிதரன், M.A.,M.Phil,B.Ed., D.Litt(USA), (முதல்வர்)

திருமதி. Dr.சு. அருணா முரளிதரன், M.Sc.,B.Ed.,M.Phil,
(துணை முதல்வர்)

**நிர்வாகக்குழு உறுப்பினர்கள்**

நல்லாசிரியர் திருமதி இரா. கமலா., B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திருமதி ந. விஜயலெட்சமி, M.A.,B.Ed.,(துணை முதல்வர்)

திருமதி. ஸ்ரீ. புவனேஸ்வரி, B.A., B.Ed .,(துணை முதல்வர்)

நல்லாசிரியர் திரு.அ. ராஜதுரை, M.Sc., M.Phil, B.Ed.,
(ஒருங்கிணைப்பாளர்)

திருமதி.வெ. கவிதா, M.Sc., B.Ed., (ஒருங்கிணைப்பாளர்)

**முதல் பதிப்பு: May - 2025**

**வடிவமைப்பு**

திருமதி. ந. இராதிகா, B.Lit., DCA.,DOA

செல்வி. S.அட்சயா, M.Sc., DCA

**அச்சுரிமை:**

நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்.

# NOTES